நகராட்சி அலுவலகம்

உசிலம்பட்டி

நாள். 12.11.2025

## அவசரக்கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு ஐப்பசி 28-ஆம் நாள் 14.11.2025 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 12.15 மணியளவில் உசிலம்பட்டி நகராட்சி நகர்மன்றத் தலைவர் (பொ) மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள் தலைமையில் அவசரக்கூட்டம் நகர்மன்ற கூடத்தில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

நகர்மன்றத்தலைவர்(பொ) மற்றும்
நகர்மன்ற துணைத்தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி

---

மன்றப்பொருள்-1

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நக எண் 3582/PPC/2024 நாள் 05.05.2025 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் நக எண் 1818/2025/அ3 நாள் 21.05.2025 கடிதங்களின்படி தமிழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கும் வகையில் இந்நகராட்சிக்கு தேவையான கீழ்க்காணும் விபரப்படி மல்டி கலர் ஸ்டிக்கர் மற்றும் மல்டி கலர் நோட்டீஸ்கள் அச்சடித்து விநியோகம் செய்ய கோரி திருநெல்வேலி மாவட்ட பல்நோக்கு பணி தொழில் கூட்டுறவு சங்கத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் அதற்காகும் செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(நக எண் 235/ 2025/இ1)

---

மன்றப்பொருள் -2

அரசாணை (2ப) எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 01.03.2024 நகராட்சிக்கு சொந்தமான ஊராட்சி ஒன்றிய வசம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சொத்துகளை ( 7 ஏக்கர் 85 சென்ட் நலம்) உடன் நகராட்சி வசம் ஒப்படைக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 7 ஏக்கர் 85 சென்ட் நிலம் இந்நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி இடம் நகராட்சிக்கு சொந்தமானது என நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு ரூ.19845/- பட்டியல் தொகை M/s KAL Publication ltd நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(நக.எண் 1507/1995/இ1

மன்றப்பொருள்-3

நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களால் 27.06.2025 அன்று நடத்தப்பட்ட காணொளி காட்சி ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நம்ம சாலை செயலியினை விரைவில் துவங்கி வைக்க உள்ளதால் நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் உடனே கள ஆய்வு செய்து சாலைகளில் உள்ள Pot holes மற்றும் patch களை கண்டறிந்து உடனே சரி செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்டு வார்டு 12 பகுதிகளில் சாலைகளுக்கு Pot holes மற்றும் patch work பணி மேற்கொள்வதற்கு ரூ.4.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விலைக்கே உள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022 பிரிவு 57(7இன் கீழ் பணிகள் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவுற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(நக எண் 38/ 2025/இ1)

---

மன்றப்பொருள்-4

நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களால் 27.06.2025 அன்று நடத்தப்பட்ட காணொளி காட்சி ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நம்ம சாலை செயலியினை விரைவில் துவங்கி வைக்க உள்ளதால் நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் உடனே கள ஆய்வு செய்து சாலைகளில் உள்ள Pot holes மற்றும் patch களை கண்டறிந்து உடனே சரி செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்டு வார்டு.1, 2, 17, 21 உள்ள பகுதிகளில் பகுதிகளில் சாலைகளுக்கு Pot holes மற்றும் patch work பணி மேற்கொள்வதற்கு ரூ.4.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டின் விலைக்கே உள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022 பிரிவு 57(7)இன் கீழ் பணிகள் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(நக எண் 38/ 2025/இ1)

மன்றப்பொருள்-5

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண் 12 பகுதியில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் திருமகனார் திருவுருவ சிலையினை தேவர் ஜெயந்தியை முன்னிட்டு புதுப்பித்து அலங்கார விளக்குகள் அமைத்தல். வர்ணம் பூசுதல் மற்றும் நீர் ஊற்று சரிசெய்தல் போன்ற பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.1.50 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022 பிரிவு 57(7) இன்கீழ் மதிப்பீட்டு விலைக்கே உள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(1670/2023/இ1)

மன்றப்பொருள்-6

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிம் நக எண் 37179/2024/GD 1 நாள் 03.07.2025. இன் படி உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் விரிவாக்க பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்பு வேண்டி வரப்பெற்ற விண்ணப்பங்களுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க பகிர்மான குழாய் இல்லாத இடங்களை கண்டறிந்து புதிதாக பகிர்மான குழாய்கள் வார்டு எண் 16 ஜேபிஆர் மகால் தெரு, வார்டு எண் 13 மண்ணெண்ணெய் குடோன் தெரு, வார்டு எண் 6 சத்யா நகர் 5 மற்றும் 6வது தெரு பகுதிகளில் பதிக்க ரூ.5.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022 பிரிவு 57(7) இன்கீழ் மதிப்பீட்டு விலைக்கே உள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(1857/2018/இ1

---

மன்றப்பொருள்-7

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் நேரடி அறிவுரை நாள் 09.08.2025 -இன் படி ஊராட்சி ஒன்றியத்தால் ஒப்படைக்கப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான சொத்துகளில் பேருந்து நிலைய கட்டுமான பணி நடை பெற உள்ள 1 ஏக்கர் நிலத்தில் உள்ள கடை உரிமதாரர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்து வழங்க பூ மார்கெட் அருகில் உள்ள 40 வருட தேக்க கழிவுகளை ஜேசிபி மற்றும் டிப்பர் லாரி மூலம் அகற்றி திருமங்கலம் நகராட்சிக்கு கொண்டு செல்லும் பணி மேற்கொள்ள உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெற்று ரூ.6.20/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022 பிரிவு 57(7) இன்கீழ் மதிப்பீட்டு விலைக்கே உள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(1507/1995/இ1)

---

மன்றப்பொருள்-8

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நேர்முக கடித எண் 17404/2022/M1-1 நாள் 25.07.2025 உத்தரவின் படி அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு இரண்டாம் கட்டமாக காலை உணவு திட்டம் துவங்குவது தொடர்பாக சமையல் கூடத்திற்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்க பைப்லைன் மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.4.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022 பிரிவு 57(7) இன்கீழ் மதிப்பீட்டு விலைக்கே உள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(989/2023/இ1)

மன்றப்பொருள்-9

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட பணிக்கு 06.10.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | திட்டம் / வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின் படி |
|---|---|---|---|---|
| 1 | பாண்டி கோவில் பிரதான சாலையின் மேல்மட்டம் உயரமாகவும், குறுக்கு தெரு சாலைகள் அனைத்தும் பள்ளமாக இருப்பதால் பிரதான சாலையின் மட்டத்திற்கே குறுக்கு சலைகளின் மட்டத்தை அமைக்க வேண்டியுள்ளதால் , பள்ளமாக உள்ள சாலைகளில் கிராவல் அமைத்து உயர்த்தி அமைக்கும் பணி | 4.50 | M/s ரவிக்குமார் கான்ட்ரக்டர், ஒப்பந்ததாரர் | 0.10 % குறைவு |
| | | | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | 4.32 % அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக எண் 38/2025/இ1)

மன்றப்பொருள்-10

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட பணிக்கு 06.10.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | திட்டம் / வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின் படி |
|---|---|---|---|---|
| 1 | SOR நகர் மற்றும் டிக்கா நகர் சாலை ஆகிய இரண்டு எண்ணம் சாலைகளில் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு போதிய வாட்டம் இல்லாமலும் Sill Level ஒரு அடிக்கு மேல் பள்ளமாக உள்ளது. மேற்கண்ட தெருக்களில் மழைநீர் மற்றும் கழிவு நீர் தடையில்லாமல் செல்ல தாழ்வாக உள்ள பகுதிகளில் கிராவல் அமைத்து தரை மட்டத்தினை உயர்த்தி அமைக்கும் பணி | 2.60 | M/s ரவிக்குமார் கான்ட்ரக்டர், ஒப்பந்ததாரர் | 0.10 % குறைவு |
| | | | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | 4.32 % அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக எண் 38/2025/இ1)

மன்றப்பொருள்-11

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட பணிக்கு 06.10.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | திட்டம் / வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின் படி |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டி சுத்தம் செய்தல், மின் மோட்டார் இயக்குதல், உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தினை பாதுகாத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் | 5.00 | M/s சுஜி இன்பரா | 1.60 % அதிகம் |
| | | | திரு.ஈஸ்வரன் | 3.21% குறைவு |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக எண் 152/2025/இ1)

மன்றப்பொருள்-12

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட பணிக்கு 06.10.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | திட்டம் / வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின் படி |
|---|---|---|---|---|
| 1 | எஸ் மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார் / மின் ஆக்கி மற்றும் குடிநீர் தளவாட சாமான்களை பாதுகாத்தல் | 5.00 | M/s சுஜி இன்பரா | 1.60 % அதிகம் |
| | | | திரு.ஈஸ்வரன் | 3.21% குறைவு |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக எண் 125/2025/இ1

மன்றப்பொருள்-13

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட பணிக்கு 06.10.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | திட்டம் / வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின் படி |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சின்டெக்ஸ் மற்றும் போர்வெல் பராமரிப்பு பணி | 5.00 | M/s சுஜி இன்பரா | 1.60 % அதிகம் |
| | | | திரு.ஈஸ்வரன் | 3.21% குறைவு |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக எண் 134/2025/இ1)

---

மன்றப்பொருள்-14

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட பணிக்கு 06.10.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | திட்டம் / வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின் படி |
|---|---|---|---|---|
| 1 | குடிநீருக்கு தேவைப்படும் 46 எண்ணம் Gas குளோரின் சிலிண்டர் கொள்முதல் செய்யும் பணி | 2.90 | M/s சிவாலிக் ரத்தினம் கெமிக்கல்ஸ் | 1.92 % குறைவு |
| | | | திருமதி.என்.பேச்சி, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலை |
| | | | M/s சுஜி இன்பரா | 1.92 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு 01.01.2026 வரை விநியோக உத்தரவு ஏற்கனவே உள்ளூர் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை நிர்வாக நலன் கருதி ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1857/2018/இ1)

---

மன்றப்பொருள்-15

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 3582/PPC/2024 நாள் 05.05.2025 கடிதத்தில் நான்காண்டு சாதனைகளை விளக்கும் வகையில் பேருந்து நிலையங்கள் மற்றும இதர பொதுமக்கள் கூடும் இடங்களில் 07.05.2025 முதல் 07.06.2025 வரை நெகிழ்வு பலகைகள், LED திரை அமைத்து விளம்பரம்

செய்ய தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் தேனி சாலை பேருந்து நிலையம் அருகில் LED திரை அமைத்து விளம்பரம் செய்யவும், நெகிழ்வு பலகைகள் அமைக்கவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.470000/-க்கும் மேற்படி பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதற்கு வரப்பெற்ற விலைப்புளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | LED திரை (நாளொன்றுக்கு) | Flex 1 எண்ணம் |
|---|---|---|---|
| 1 | M/s SK ஸ்டுடியோ மற்றும் வீடியோ அட்வர்டைஸ்மெண்ட், சிவகங்கை | ரூ.28500/- | ரூ.5000/- |
| 2 | M/s SM போட்டோகிராபி//, மதுரை | ரூ.30000/- | ரூ.6500/- |
| 3 | M/s மகாராஜா வீடியோஸ், காரைக்குடி | ரூ.33000/- | ரூ.7300/- |

குறைந்த விலைபுள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(நக.எண் 235/2025/இ1

---

மன்றப்பொருள்-16

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தால் ஒப்படைக்கப்பட்ட 7 ஏக்கர் 85 செண்ட் நிலம் நகராட்சிக்கு சொந்தமானவை என அறிவிப்பு பலகை மற்றும் எல்லை கல் ஊன்றும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் நேரடி அறிவுரை நாள் 09.08.2025-இல் உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெற்று ரூ.1.30/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022 பிரிவு 57(7) இன் கீழ் மதிப்பீட்டு விலைக்கே உள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் வகைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(நக எண் 1507/1995/இ1)

---

மன்றப்பொருள்-17

இந்நகராட்சி வாகனம் TN-58 AS-3951-க்கு தகுதி சான்று பெறுவதற்கு பெயிண்டிங், ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுது வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதற்கு அகும் உத்தேச செலவினம் ரூ.1.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(நக எண் 2887/2023/எச்1)

மன்றப்பொருள்-18

இந்நகராட்சியில் உள்ள கணினி மற்றும் பிரிண்டர்களின் ஆண்டு பராமரிப்பு உரிமம் கடந்த 12.07.2025 உடன் முடிவடைந்துள்ளது. அதனை மீண்டும் 13.07.2025 முதல் 12.07.2026 முடிய ஓராண்டிற்கு பராமரிப்பு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(நக எண் 2359/எச்1/2024)

---

மன்றப்பொருள்-19

இந்நகராட்சி பகுதிகளில் பொது சுகாதாரம் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த விளம்பரம் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், பிளக்ஸ் பேனர்கள் வைத்தல் ஆகியவைகளுக்கு 31.03.2026 முடிய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(நக எண் 805/எச்1/2025)

---

மன்றப்பொருள்-20

இந்நகரட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளின் ஓரத்தில் வளர்ந்துள்ள புதர் செடிகள் மற்றும் புல் பூண்டுகளை அகற்றப்படுத்த புல் செடிகள் அகற்றும் இயந்திரம் 4 எண்ணம் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனும்தி வழங்கலாம்.

(நக எண் 567/எச்1/2020)

---

மன்றப்பொருள்-21

தற்சமயம் வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள காரணத்தால் இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் வரவுவதை தடுக்க பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கப்பட வேண்டியுள்ளது அதில் 250.கி.கி நில வேம்பு கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(நக எண் 567/எச்1/2025)

---

மன்றப்பொருள்-22

தற்சமயம் வடகிழக்கு பருவமழை காலமாக இருப்பதால் தொற்று நோய்கள் பரவாமல் இருக்க கீழ்க்கண்ட கிரிமி நாசினிகள் தேவைப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 15000கி.கி |
| 2 | பிளீச்சிங் பவுடர் | 15000கி.கி |

மேற்கண்ட கிரிமி நாசினி பொருட்களை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(நக எண் 567/எச்1/2020)

---

மன்றப்பொருள்-23

இவ்வலுவலக ஈப்பு வாகனம் TN-58 AW-2747 குளிர் தன்மை (AC) பழுதடைந்துள்ளது அதன் வயரிங் வேலைகளை பழுதுபார்க்க புதிய குளிர் சாதனம் பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(நக எண் 805/எச்1/2025)

---

மன்றப்பொருள்-24

இந்நகராட்சி பேருந்து நிலைய கடை 119/82 தொடர்பான திரு. அ.பாண்டித்துரை என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண். W.P.(MD) No. 20304 of 2018-ற்கு வழக்காடு கட்டணமாக ரூ. 15,000/- திரு. கண்ணன் வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(நக.எண். 812/2023/அ1)

---

மன்றப்பொருள்-25

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான 9 ஆண்டுகள் குத்தகை இனமான 7 கடைகளுக்கு அரசாணை எண். 92, நாள். 03.07.2007-இன்படி பொதுப்பணித்துறை விலை விகிதம் மற்றும் அங்காடி மதிப்பு அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து 1.4.2026 முதல் குத்தகை உரிமம் புதுப்பித்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

நக.எண். 31/2024/அ1

---

மன்றப்பொருள்:-26

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திடமிருந்து பெறப்பட்ட இந்நகராட்சிக்குச் சொந்தமான 7.85 ஏக்கர் நிலப்பரப்பில் 1 ஏக்கர் நிலப்பரப்பு பேருந்து நிலைய விரிவாக்கப்பணிக்கு போக மீதமுள்ள 6.85 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள குத்தகை இனங்களான தினசரி சந்தை மற்றும் வாரச்சந்தை ஆகியவற்றிற்கு ஏல நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஊராட்சி ஒன்றியத்தால் நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட்ட தொகையை இந்நகராட்சி பணியாளர்களைக் கொண்டு வசூல் செய்யவும், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தால் ஒப்படைக்கப்பட்ட இருசக்கர வாகனம், மற்றும் கழிப்பறை மற்றும் இதர இனங்களுக்கு 2026-27ஆம் நிதியாண்டிற்கு குத்தகைத்தொகை நிர்ணயம் செய்ய ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வரை கீழ்க்காணும் பட்டியல் சொல்லப்பட்டுள்ள இனங்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தால் நிர்ணயம் செய்த வாடகைத்தொகையை கணினியில் பதிவேற்றம் செய்து வசூல் செய்வதற்கும், மேற்படி குத்தகை இனங்கள் மேல்நடவடிக்கை தொடர்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற்று, அரசாணைகளின்படியும், சுற்றறிக்கைகளின்படியும் வாடகை மறு நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கடைகளின் விபரம் |
|---|---|
| 1 | தேனிச்சாலை கடைகள் |
| 2 | பஜார் ஸ்டால் |
| 3 | முருகன்கோவில் தெரு, வணிக வளாக கடைகள் |
| 4 | பேரையூர் சாலை வணிக வளாகம் |
| 5 | பஜார் பள்ளி சத்திரத்தெரு குடோன் |
| 6 | தேவர் திருமண மண்டபம் |
| 7 | (54 கடைகளில்) 11 கடைகள் |
| 8 | பேரையூர் சாலை சந்தைக்கருகில் உள்ள கடைகள் |
| 9 | நபார்டு கடைகள் |
| 10 | தரை வாடகை கடைகள் |
| 11 | ஜே.வி.வி.டி கடைகள்- பேரையூர் சாலை |
| 12 | நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் உள்ள கட்டிடம் |
| 13 | சைக்கிள் ஸ்டாண்ட் |
| 14 | நகராட்சி சத்திரம் அருகில் உள்ள குடியிருப்பு |

அலுவலகக்குறிப்பு:-

1). மன்றத்தின் முடிவிற்கு.

2). நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் பின்னேற்பு பெறப்பட்டு அரசாணைகள், சுற்றறிக்கைகளின்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3). அலுவலகக்குறிப்பு 1 அல்லது 2-ஐ அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள்-27

இந்நகராட்சி 2024-25-ஆம் நிதியாண்டிற்கு வருவாய் மூலதன நிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதிகளுக்கு ஆண்டுக்கணக்கு UTIS மென்பொருளில் தயார் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 75,000/- மட்டும் சஞ்சய் சொலியூசன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2426/2018/பி1)

---

மன்றப்பொருள்-28

நகராட்சி நிர்வாகமண்டல இயக்குநர், மதுரை அவர்களின் நேரடி அறிவுரை நாள் 09.08.2025 இல் ஊராட்சி ஒன்றியத்தால் ஒப்படைக்கப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான சொத்துகளில் பேருந்து நிலைய கட்டுமான பணி நடை பெற உள்ள 1 ஏக்கர் நிலத்தில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு பதிலாக பூ மார்கெட் அருகில் ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி பின்புறம் உள்ள பழைய கழிப்பிடத்தினை மராமத்து பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள ரூ.3.00 / - இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022 பிரிவு 57(7) இன்கீழ் மதிப்பீட்டு விலைக்கே உள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(1507/1995/இ1)

---

மன்றப்பொருள்-29

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்9 மதுரை சாலையில் உள்ள பொது கழிப்பிடம் பொது ஏலத்திற்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கழிப்பிடம் மிகவும் சேதமடைந்து யன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மராமத்து பணி மேற்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கழிப்பிடம் மராமத்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக.எண். /2025/இ1)

---

மன்றப்பொருள்-30

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2018-2019 (IUDM) திட்டத்தின் கீழ் கடன் மற்றும் மானியத் தொகை ரூ.7303.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.130.00 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 7433.00 இலட்சம் மதிப்பீட்டில் பிரத்யோக குடிநீர் திட்ட பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திட்டம் 25.05.2023 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு சோதனை ஓட்ட காலம் மற்றும் ஒப்பந்ததாரரின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு காலம் 31.12.2024 உடன் முடிவடைந்தது. 01.01.2025 முதல் நகராட்சி மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் Gas குளோரின் கையிருப்பு இல்லாத காரணத்தினாலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்தில் போதிய நிதி வசதி இத்திட்டத்தில் இல்லாத காரணத்தினாலும் உசிலம்பட்டி நகராட்சி மூலம் gas குளோரின் சிலிண்டர் வாங்கி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. தற்போது மழைகாலம் என்பதால் வைகை ஆற்றில் இருந்து வரும் நீரின் தன்மை மிகவும் கலங்கலாக இருப்பதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022 பிரிவு 57(7) இன்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தர விலை விகித பட்டியலின் அடிப்படையில் 5 மாத காலம் (02.09.2025 முதல் 31.01.2026 வரை) மதிப்பீடு ரூ.6.00/- இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு உள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் gas குளோரின் சிலிண்டர் மற்றும் ஆழம் கொள்முதல் செய்யப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்

(நக எண் 1857/ 2018/இ1)

---

<u>மன்றப்பொருள்-31</u>

தலைமை செயலர், சென்னை அவர்களால் 11.11.2025 அன்று நடத்தப்பட்ட காணொளி காட்சி ஆய்வு கூட்டத்தில் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் உடனே கள ஆய்வு செய்து சாலைகளில் உள்ள Pot holes மற்றும் patch களை கண்டறிந்து உடனே சரி செய்ய அறிவுறுத்தப்பட்டது. ஏற்கனவே உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்டு முதற்கட்டமாக வார்டு, 1, 2, 12, 17, 21 பகுதிகளில்உள்ள Pot holes மற்றும் patch சரிசெய்யப்பட்டடது. எனவே 01 முதல் 24 வார்டுகளில் உள்ள Pot holes மற்றும் patch சரிசெய்ய ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக எண் 1857/ 2018/இ1)

S. தேன்மொழி.

நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும்

நகர்மன்ற தலைவர் (பொ)

உசிலம்பட்டி நகராட்சி

**உசிலம்பட்டி நகராட்சி**
**நகர்மன்ற மேஜை கூட்டப்பொருள்**
**நாள் 14.11.2025**

மன்றப்பொருள் – 1

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 6 சத்யா நகர் 7வது தெருவில் சாலை மிகவும் பள்ளமாக இருப்பதால் பேவர் பிளாக் சாலையை உயர்த்தி அமைக்கவும், வார்டு எண் 8 காளியம்மன் கோவில் தெருவில் சாலை மிகவும் பள்ளமாக இருப்பதால் பேவர் பிளாக் சாலையை உயர்த்தி அமைக்கவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் / 2025/இ1 )

மன்றப்பொருள் – 2

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 20 SDA பள்ளி தெருவில் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் மேற்படி பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்களை அகற்றி புதிதாக மழைநீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் / 2025/இ1 )

மன்றப்பொருள் – 3

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 22 இராமத்தேவர் பகுதியில் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் மேற்படி பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்களை அகற்றி புதிதாக மழைநீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் / 2025/இ1 )

மன்றப்பொருள் – 4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 5 அப்துல்கலாம் தேவர் தெரு, சசிவீரணத்தேவர் தெரு பகுதியில் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் மேற்படி பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்களை அகற்றி புதிதாக மழைநீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் / 2025/இ1 )

**மன்றப்பொருள் – 5**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 2 தேனி மெயின் சாலை பகுதியில் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் மேற்படி பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்களை அகற்றி புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண்       / 2025/இ1 )

**மன்றப்பொருள் – 6**

கோட்டப்பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, மதுரை அவர்களின் கடிதம் நக எண் CRIF 2024–2025 /உ/ நாள் 09.09.2025 தேதிய கடிதத்தில் மத்திய சாலை நிதி திட்டம் 2024 – 25 வத்தலக்குண்டு – பேரையூர் – காரியாபட்டி – திருச்சுழி – கமுதி – சாயல் குடி (SH 154) சாலையில் 22 / 0 – 28 / 0 வரை இரு வழிச் சாலையிலிருந்து கடின புருவங்களுடன் கூடிய இரு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உசிலம்பட்டி நகராட்சிகுச் சொந்தமான குடிநீர் குழாய்கள் 0.30 மீ ஆழத்தில் அமைந்துள்ளது எனவும் குடிநீர் குழாய்கள் குறைந்தபட்சம் 1.20 மீ ஆழத்தில் அமைக்க வேண்டும் எனவும் பணி நடைபெறும் போது சேதமடையாமல் இருக்கும் வண்ணம் குடிநீர் குழாய்களை சாலை பகுதியின் சாலை பகுதியின் எல்லை விளிம்பில் நகராட்சி மூலம் மாற்றியமைத்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பேரையூர் சாலை, மதுரை ரோடு மற்றும் வத்தலகுண்டு சாலையில் உள்ள குடிநீர் குழாய்கள் உடைப்பு ஏற்படுவதால் உடைப்பினை சரிசெய்யவும் மற்றும 01. முதல் 24 வார்டுகளில் உள்ள குழாய் உடைப்புகளை சரிசெய்ய மதிப்பீடு செய்யப்பட்டமைக்கு ரூ.5.00 இலட்சத்திற்கு உள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022 பிரிவு 57(7) இன்கீழ் பணிகள் மேற்கொண்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க எண்       / 2025/இ1 )

**மன்றபொருள்–7**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் நகராட்சிக்கு சொந்தமான 125 எண்ணம் சிறு மின் விசை பம்பு மூலம் 0.23 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு மேற்படி 01. முதல் 24 வரை வார்டுகளில் உள்ள சிறுமின் விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 5 மாத காலத்திற்கு ரூ.5.00 இலட்சத்திற்கு உள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022 பிரிவு 57(7) இன்கீழ் பணிகள் மேற்கொண்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம் (ந.க எண்     /2025/இ1)

மன்றப்பொருள்–8

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் 8 எண்ணம் சுத்தம் செய்யவும், நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தினை கண்காணிக்கவும், மின் மோட்டார் இயக்குதல் மற்றும் குடிநீர் வால்வு திறந்து மூடுதல், மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியளார்கள் இல்லாத காரணத்தினால் போதிய பணியளார்கள் இல்லாத காரணத்தினால் 5 மாத காலத்திற்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் (குழாய் திறப்பாளர் 3 நபர்கள், பைப் மஸ்தூர் 2 நபர்கள்) பணியாளர்களை நியமனம் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி பணிக்கு 19.09.2025 வரை பட்டியல் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது நகர்மன்ற தலைவர் பதவி தொடர்பான வழக்கு W.P No 12614/2025 சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் மேற்படி அத்தியாவசிய குடிநீர் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரி நகர்மன்ற அனுமதி பெற இயலாத சூழ்நிலை உள்ளதால் மேற்படி வழக்கு முடிவடைந்து அடுத்த நகர்மன்ற கூட்டம் கூட்டப்படும் வரை மேற்படி பணியினை கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 134/2025/இ1)

மன்றப்பொருள்– 9

உசிலம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் மின் மோட்டார் இயக்குதல், குடிநீர் வால்வு திறந்து மூடுதல், மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியளார்கள் இல்லாத காரணத்தினால் 5 மாத காலத்திற்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் (குழாய் திறப்பாளர் 3 நபர்கள், பைப் மஸ்தூர் 2 நபர்கள்) பணியாளர்களை நியமனம் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி பணிக்கு 19.09.2025 வரை பட்டியல் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது நகர்மன்ற தலைவர் பதவி தொடர்பான வழக்கு W.P No 12614/2025 சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் மேற்படி அத்தியாவசிய குடிநீர் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரி நகர்மன்ற அனுமதி பெற இயலாத சூழ்நிலை உள்ளதால் மேற்படி வழக்கு முடிவடைந்து அடுத்த நகர்மன்ற கூட்டம் கூட்டப்படும் வரை மேற்படி பணியினை கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 125/2025/இ1)

மன்றப்பொருள்–10

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சின்டெக்ஸ் மற்றும போர்வெல் அமைந்துள்ள இடங்களில் மின் மோட்டார் இயக்குதல் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியளார்கள் இல்லாத காரணத்தினால் 5 மாத காலத்திற்கு ரூ.5.00

இலட்சம் மதிப்பீட்டில் (குழாய் திறப்பாளர் 3 நபர்கள், பைப் மஸ்தூர் 2 நபர்கள்) பணியாளர்களை நியமனம் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி பணிக்கு 19.09.2025 வரை பட்டியல் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது நகர்மன்ற தலைவர் பதவி தொடர்பான வழக்கு W.P No 12614/2025 சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் மேற்படி அத்தியாவசிய குடிநீர் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரி நகர்மன்ற அனுமதி பெற இயலாத சூழ்நிலை உள்ளதால் மேற்படி வழக்கு முடிவடைந்து அடுத்த நகர்மன்ற கூட்டம் கூட்டப்படும் வரை மேற்படி பணியினை கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினனத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 152/2025/இ1)

தே. தேன்மொழி.

நகர்மன்ற துணை தலைவர் (ம)
நகர்மன்ற தலைவர் (பொ)
உசிலம்பட்டி நகராட்சி